2139

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 08 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் :- இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

### பகுதி I

❖ இவ் வினாத்தாளிற்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) ஈன்ற சேய் முகம் கண்டு தீம்பால் சுரக்கும் இனிய தாய்................ இங்கு சேய் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1) தந்தை 2) மாதா 3) தாய் 4) குழந்தை

02) பாரி மன்னன் முல்லைக் கொடியின் வாட்டத்தைத் தீர்க்க எண்ணுகிறான். இங்கு வாட்டம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1) தளர்ச்சி 2) வளர்ச்சி 3) சோர்வு 4) மயக்கம்

03) அல்லும் பகலும் ஆராய்ந்தான். ஐயம் தீர்க்க வழி காணான். இங்கு ஐயம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1) சந்தேகம் 2) தெளிவு 3) மயக்கம் 4) தாக்கம்.

04) நாடகத்தை "பாமர மக்களின் பல்கலைக் கழகம்" என சரோஜினி தேவியார் கூறியிருக்கிறார். இங்கு பாமரர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1) பண்டிதர் 2) வறியோர் 3) பெரியவர் 4) ஏழை

05) தெற்காசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை வீராங்கனை தர்சினி பல கோல்களைத் தட்டி வெற்றி வாகை சூடினார். இங்கு வீராங்கனை என்பதன் எதிர்ப்பாற் சொல்
1) வீரன் 2) வீரி 3) வீராங்கனன் 4) வெற்றியாளன்.

06) அண்மையில் இடம்பெற்ற கண்டிக் கலவரம் பேஸ்புக் (Face book) முடக்கத்தினால் கட்டுப்பாடுக்குள் கொண்டு வரப்பட்டது. இங்கு பேஸ்புக் (Face book) என்பதன் கலைச் சொல்.
1) தொலைநோக்கி 2) முகநூல் 3) வலையமைப்பு 4) கணிணி

07) முகுந்தனின் உடல் வைரஸ் காய்ச்சலினால் கணகணப்பாக இருந்தது. இங்கு கணகண என்பது.
1) அடுக்குமொழி 2) இணைமொழி 3) இரட்டைமொழி 4) அடுக்கிடுக்கு மொழி

08) வாழையின் இளம்பிஞ்சு கச்சல் என்பது போல பனையின் பிஞ்சு
1) வடலி 2) வடு 3) காய் 4) நுங்கு

09) துன்பம், வட்டம், மஞ்சள், சிரிப்பு போன்ற சொற்கள்
1) சினைப்பெயர் 2) பொருட்பெயர் 3) தொழிற் பெயர் 4) குணப் பெயர்

2139

10) ஆழமறியாது காலை விடாதே எனும் பழமொழி குறிப்பது.
1) ஆழம் பார்த்து கால் வைத்தல்.
2) கடலின் ஆழம் பார்த்தல்.
3) எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.
4) ஆராய்ந்து செய்தல் கூடாது.

11) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக என்பது.
1) வாழ்த்தல் 2) வேண்டல் 3) வைதல் 4) விதித்தல்

12) படித்த மாணவன் பரீட்சையில் சித்தியடைந்தான். இங்கு பெயரெச்சமாக அமைவது.
1) படித்த 2) மாணவன் 3) பரீட்சை 4) சித்தியடைந்தான்

13) பின்வருவனவற்றுள் தெரிநிலை வினையாக வருவது.
1) வரைந்தான் 2) சூரியன் 3) பெருஞ் செல்வன் 4) நடையன்

14) மாணவர்களுக்கு சிறந்த ஒழுக்கம் அவசியம். இங்கு இடம்பெற்ற வேற்றுமைப் பொருள்
1) கொடை 2) தகுதி 3) நட்பு 4) முறை

15) முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை.
1) 12 2) 18 3) 30 4) 216

16) பின்வருவனவற்றுள் ஒல்லாந்து மொழிச் சொல்
1) அலுமாரி 2) யன்னல் 3) பட்டாளம் 4) கக்கூசு

17) சந்திரன், அறிவு, மாதம், மதித்தல், ஞாபகம் எனும் பல பொருள் குறித்த ஒரு சொல்
1) பூமி 2) கிழமை 3) ஞானம் 4) மதி

18) பறவை, வளையம், அணி, கணக்காளன் எனும் சொற்கள் குறிப்பது.
1) காரண இடுகுறிப் பெயர் 2) காரண சிறப்புப் பெயர்
3) காரணப் பெயர் 4) இடுகுறிப் பெயர்

19) இளைப்பாறிச் சென்ற ஆசிரியருக்கு ............................ விழா நடத்தப்பட்டது.
1) வைர வழா 2) மணிவிழா 3) பொன் விழா 4) வெள்ளி விழா.

20) நேற்று முழுவதும் நல்ல மழை பெய்தது ............................ கிணறுகள் நிரம்பவில்லை.
1) எனினும் 2) ஆகவே 3) அதனால் 4) எனவே

(20x1 ½ =30 புள்ளிகள்)

## பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) தமிழ்ப்பாடத்தில் வகுப்பறையில் மேற் கொள்ளப்பட்ட ஒப்படைக் கணிப்பீட்டை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) இக் கணிப்பீட்டிற்கு உமக்கு வழங்கப்பட்ட தலைப்பு யாது?
2) இக் கணிப்பீட்டிற்குரிய ஆசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் 3 தருக?
3) இக் கணிப்பீட்டிற்குரிய தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்?
4) இக் கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் 4 தருக?

(10 புள்ளிகள்)

02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1) வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்.
2) நீர் சென்று இரசித்த கல்விச் சுற்றுலா.
3) குப்பை மேட்டிலே கவனிப்பாரற்றுக் கிடக்கும் நாயின் சுயசரிதை.
4) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். (20 புள்ளிகள்)

03) உங்கள் பிரதேசத்தின் சிறப்புக்களை எடுத்துக் கூறி, அவற்றைப் பார்வையிட வருமாறு நண்பருக்கு கடிதம் எழுதுக. (10 புள்ளிகள்)

04) பின்வரும் வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1) கூண்டிற் கிளி கவிதையின் ஆசிரியர் யார்?
2) உருள் பெருந்தேர்க்கு அச்சாணியாய் விளங்கியவன் யார்?
3) ஆக்கிமிடீசு கண்டு பிடித்த விஞ்ஞானத் தத்துவம் யாது?
4) இலங்கை மணித் திருநாட்டின் சுதந்திர வீரர்களாக குறிப்பிடப்படுவோர் யாவர்?
5) பாரி மன்னனின் உயிர் நேயம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
6) "வாழ்வதற்காக வாசி" எனும் கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டது?

(5x2=10 புள்ளிகள்)

05) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

### வெண்ணிலா

இரு விளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே
இராக்காத் தொளி கொடுப்பாய் வெண்ணிலாவே
சூரியன் போய் மறைந்த பின்பு வெண்ணிலாவே
தூய வொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே
தயிர்க்கடலில் வெண்ணெய் போல வெண்ணிலாவே
தனி விசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே
பெண்கள் முகம் போல் வருவாய் வெண்ணிலாவே
பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே.

1) பாடலில் கூறப்பட்டுள்ள இரு விளக்குகள் எவை?
2) வெண்ணிலா எப்போது தூயவொளி பரப்பிடும்?
3) இங்கு வெண்ணிலா எவ்வாறு வளர்ந்திடுவாய் எனக் கூறப்பட்டுள்ளது?
4) இப்பாடலில் வந்துள்ள உவமைகள் யாவை?
5) ஒத்த சொல் தருக.
   1) விசும்பு   2) சூரியன்

**அல்லது**

'கர்ணனும் கும்பகர்ணனும்' என்ற கட்டுரையை எழுதியவர் ரா.பி சேதுப்பிள்ளை அவர்கள். கர்ணனும் கும்பகர்ணனும் செஞ்சோற்றுக் கடனுக்காகத் தமது உயிரையே தியாகம் செய்தவர்கள்.

கும்பகர்ணன் இலங்கை வேந்தனாகிய இராவணனது தம்பியாவான். வீரத்திலும் வலிமையிலும் சிறந்தவன். சீதையை இலங்கை மன்னன் சிறை வைத்து தகாத செயல் என்று அறிவுரை கூறியும் இராவணன் செவிமடுக்கவில்லை. இராமன் கும்பகர்ணனை தன் பக்கம் சேர்க்க விபீடணனை தூது அனுப்பியும் கும்பகர்ணன் இணங்கவில்லை. இராமனது கணையால் தான் ஆவி துறப்பது நிச்சயம் எனத் தெரிந்திருந்தும் ஆவியையும் அளவற்ற செல்வத்தையும் வெறுத்து தமையனுக்காக உயிர் துறந்தவன்.

1) கர்ணனும் கும்பகர்ணனும் எனும் கட்டுரையை எழுதியவர் யார்?
2) செஞ்சோற்றுக் கடனுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள் யாவர்?
3) கும்பகர்ணன் எவற்றில் சிறந்தவன்?
4) இலங்கை வேந்தன் இராவணனின் தம்பி யார்?
5) பொருள் தருக.
   1) கனை :-   2) ஆவி :-

(10 புள்ளிகள்)

06) பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியம் அமைக்குக.
1) கணம் :-
2) குடு குடு :-
3) உயர உயர :-
4) சின்னஞ்சிறிய :-
5) அல்லும் பகலும் :-
6) நகமும் தசையும் போல :-

(06 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457